தஞ்சாவூர் மாவட்டம்

சர்க்கார் இலாக்காக்கள்
அலுவல்களைக் குறிக்கும் வருடாந்தர
அறிக்கை

1952–53

சென்னை
சர்க்கார் அச்சுக்கூட ஸூபரின்டெண்டெண்டால் அச்சிடப்பட்டது
1954
Price, Re. 1-0-0

முன்னுரை

வடவேங்கிடம், தென்குமரியாயிடை தமிழ் கூறும் நல்லுலகத்து நடுக்கண் விளங்கும் தஞ்சைமா வட்டத்தில், பல்லாண்டு பரவிநின்ற பரதேசப்பிடுப்பி னின்றும் பரதகண்டம் பிறந்து நின்று ஐந்தே ஆண்டுகளுக்கு பின், உலகமே கண்டிராத பெரியதோர் தேர்தலில், வயது வந்தோர் வாக்குபெற்று வந்த இந்நாட்டு மன்னர்களாம் மக்கள் ஆட்சி தொடங்கி நின்ற முதலாம் ஆண்டாகிய **1952–53**-ல் அரசியலார் வகுத்த பல திட்டங்கள் பற்றியும், ஆட்சிப் பிரிவுகள் ஆற்றிய பல பணிகள் பற்றியும், பொதுமக்கள் பங்குகொண்ட பல்வேறு நற்காரியங்கள் பற்றியும் சுருங்க கூறி விளங்க வைப்பதே இவ் வாண்டு அறிக்கையின் நோக்கமாகும்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி அறிக்கை, 1952-53

(1) ஆட்சி.

	பக்கம்
1. பொது—ரெவின்யூ பிரிவு	1
2. நீதிப் பிரிவு	4
3. போலீஸ் பிரிவு	5
4. பதிவுப் பிரிவு	6
5. வியாபார வரி பிரிவு	7

(2) மராமத்து.

1. ஆற்றுப் பிரிவு	8
2. கட்டிடப் சாலைப் பிரிவு	9
3. நெடுஞ்சாலை பிரிவு .. .. .. = ..	9
4. மீன் ஆற்றல் பிரிவு	10
5. வானொலி	10

(3) பொது நலம்.

1. உடல்நலப் பிரிவு	10
2. மருத்துவ சாலைப் பிரிவு	10
3. கல்வித்துறை பிரிவு	11
4. கூட்டுறவு பிரிவு	12
5. மாதர்நல பிரிவு	13
6. தொழில்சாலை—தொழிலாளர் பிரிவு	13
7. இந்துமத அறநிலய பாதுகாப்பு பிரிவு	13
8. தீயணைப்பு படையினர்	13

(4) இயற்கை வளங்கள்.

1. விவசாயம்	14
2. கால்நடை	15
3. காடுகள்	15
4. துறைமுகங்கள்	16
5. மீன் வளம்	16

(5) ஸ்தல சுய ஆட்சி.

1. தஞ்சை ஜில்லா போர்டு ஆட்சி	17
2. நகராட்சிகள்	18
3. ஊராட்சிகள்	19

பக்கம்

(6) பலவகை.

1. காந்தி அடிகள் நினைவிற்கான காசநோய் நீக்கு நலநிவாரண நிலயம் 19
2. கரந்தைத் தமிழ்ச் சங்கம், ... 20
3. தஞ்சைக் கலைக்கூடம் 20
4. சரஸ்வதி மகால் நூல் நிலயம், ... 20
5. தொல்பொருள் கலைப்பிரிவு 20
6. ஆதின மடங்கள் 21
7. தஞ்சை சாகுபடியாளர் பண்ணையாட்கள், பாதுகாப்பு, அவசர சட்டம், 1952 21
8. புயல் 21

(1) ஆட்சி.

1. பொது—ரெவின்யூ பிரிவு.

ஆற்றுப்பாய்ச்சல், பாய்கால், வடிகால் வேலைகள்.

இயற்கை நலம் கொழிக்கும் காவிரி வெண்ணாற்றுலும், செயற்கை நலம் விளங்கும் நல்லணை கால்வாயினுலும், வளம்பெற்ற இத்தஞ்சைமாவட்டத்தில் சித்தக்காடு, கடகடப்பை பாசன வாய்க்கால் திட்டம், ஜெம்புகவாரி வடிகால் திட்டம் இவைகளினுல் 104 ஏக்கர் 84 சென்டு நிலப்பரப்பும், அய்யவையனூர் வடிகால் அபிவிருத்தி திட்டம், நண்டலாறு திட்டம் இவைகளினுல் 634 ஏக்கர் நிலப்பரப்பும் நடைமுதல் ஆண்டில் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டன. மேலும் பீமன் வாய்க்கால் சீர்திருத்த திட்டம், மனக்குன்னம் வடிகால் ஒடையுடன் இணைக்கும் திட்டம், சக்கிலியனூர் என்ற வடிகால் கடலுடன் நேராகக் கலக்க வெட்டப்பட்ட கால்வாய் இவைகள் முடிவடைந்தன. தஞ்சை தாலுக்காவில் மட்டும் ரூபாய் 14,367 செலவில் 37 பாசன திட்டங்கள் மராமத்து செய்யப்பட்டன.

மான்ய கிணறுகள்.

இவ்வாண்டு மான்ய கிணறுகள் வெட்ட யாதொரு மான்யமும் புதிதாக தரப்படவில்லை. முந்திய ஆண்டுகளில் வெட்டப்பட்ட கிணறுகளின் மூலம் அதிக உணவு உற்பத்தி செய்யப்பட்டது. இத்தகைய கிணறுகள் மூலம் பயிரிடப்பட்ட பரப்பு திருத்துரைப்பூண்டி தாலுக்காவில் மட்டும் 122 ஏக்கர் அளவாகும்.

பயிர்த்தொழில் விவசாயக்கடன் உதவிகள்:

நில அபிவிருத்தி விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் 1362-ம் பசலியில், ரெவின்யூ அதிகாரிகளால் ரூ. 10,78,360-ம், விவசாய இலாகா அதிகாரிகளால் ரூ. 3,36,784-ம் கடனுக கொடுத்து உதவப்பட்டது. இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை முறையே 4,008-ம், 3,510-ம் ஆகும்.

சிறு நீர் திட்ட நீர்ப்பாய்ச்சல் ஏரிகள்.

சீர்கெட்ட நிலையிலிருந்த ஏரிகள் 463-ல், இவ்வாண்டு ரூபாய் 61,245 செலவில், 51 ஏரிகள் வரை சீர்செய்யப்பட்டன.

அதிக விளைவு.

அரசாங்கத்தினரால் கொடுத்துதவப்பட்ட பலவகை ரசாயன உரங்கள் கொண்டு, நூதன முறையில் 9,938 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டதில் சீர்காழி தாலுக்காவில் மட்டும் 368 டன் அரிசி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது. இதேபோல் மாவட்டமுற்றும் அதிக விளைச்சல் கண்டபோதிலும், பருவ மழை தவறியதாலும், பெரும் புயலாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டு மாவட்டத்தின் விளைவு குறைந்தே நின்றது.

வருமானம்.

பாசிக் குத்தகை மூலம் ரூ. 54,323–10–6-ம், கிளிஞ்சல் பொறுக்குதல், மண் எடுத்தல் மூலம் ரூ. 3,076–13–4-ம், கலால் மூலம் ரூ. 36,734–9–0-ம், சர்க்கார் மரங்கள் மகசூல், பட்டுபோனவைகள், கள்ளத்தனமாக

வெட்டப்பட்டவைகள் இவைகள் மூலம் ரூ. 33,531-4-0-ம், ஆக்ரமணங்களின் பேரில் விதிக்கப்பட்ட தீர்வை மூலம் ரூ. 90,067-13-0-ம், இவ்வாண்டு வரவு வந்துள்ளன.

தீ விபத்து.

55 தீ விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமாக ரூ. 757-ம், பனை மரங்கள் 20-ம், பனை மட்டைகள் 4,500-ம் கொடுத்து உதவப்பட்டன.

குடி தண்ணீர்.

கிராமங்களுக்கு குடி தண்ணீர் தந்துதவ திட்டத்தின்கீழ் இவ்வாண்டு 74 புதிய கிணறுகளும், பழைய கிணறுகளுக்கு 107 கிணற்று மேடைகளும் கட்டப்பட்டன.

நில ஆர்ச்சிதம்.

நில ஆர்ச்சித சட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்பட்ட நிலங்களின் விபரம் வருமாறு :—

வரிசை எண்.	விபரம்.	பரப்பு.		தொகை.		
		ஏ.	செ.	ரூ.	அ.	பை.
1.	கல்வி/கட்டிடங்கள் விளையாட்டு இடங்கள்.	0	96	5,607	6	5
2.	பொது உடல் நலம்/நாடாட்சி வைத்தியசாலை, தண்ணீர் வசதி, பொதுகழிவு இடம்.	1	42	4,584	11	8
3.	நெடுஞ்சாலைகள்/சாலை விஸ்தரிப்பும், புதுச்சாலைகள் அமைப்பும்.	47	89	1,27,036	14	6
		6,693 சதுர அடி.				
4.	தொடர்வண்டி பிரிவு	0	38	165	9	7
5.	நீர்பாசன வசதிகள்/வாய்க்கால்கள் மதகுகள்.	3	0	2,593	7	8
6.	ஹரிஜனங்கள் வீடுகட்ட மனைகள்.	307	7	3,57,239	4	1

குத்தகை அல்லது வாரக்குறைப்பு, ஜமீன் ஒழிப்புச் சட்டங்கள்.

ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படப் போவதாக விளம்பரப்படுத்தப்பட்ட 26 கிராமங்களில், உயர்நீதி மன்றத்தின் தடைக்குட்பட்ட 3 கிராமங்கள் நீக்கி மற்றவைகள் யாவும் எடுத்துக்கொள்ளப்பட்டு ரயத்துவாரியாக மாற்றுவதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவை தவிர 397 இனும் கிராமங்களில் குத்தகை அல்லது வாரக்குறைப்புச் சட்டம் அமுல் செய்யப்பட்டு நியாய வாரம் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி சட்டங்களின்கீழ் முறையே ரூ. 1,03,598-7-9-ம், ரூ. 5,51,398-11-11-ம் நிலச்சுவான்தார்களுக்கு வழங்கப்பட்டது. வாரக்குறைப்பு அமுல் செய்யப்பட்டதற்கு ஈடாக மதம் மற்ற ஸ்தாபனங்களுக்காக மட்டும் ரூ. 1,51,923-15-2 சர்க்காரால் கொடுத்துதவப்பட்டது.

நிலம் வழங்கல்.

அறிக்கை ஆண்டில் 19 அரசியல் தியாகிகளுக்கு 31 ஏக்கரும், 15 மாஜி ராணுவத்தினருக்கு 92 ஏக்கரும், மற்ற ஏழைகளுக்கு 2½ ஏக்கரும் வழங்கப்பட்டன.

ஹரிஜன முன்னேற்றம்

கல்வி.

ஹரிஜன பிள்ளைகளுக்கே நடத்தப்படும் 155 பள்ளிக்கூடங்களில், 7,326 சிறுவர்களும், 3,163 சிறுமிகளும் கல்வி பயின்றனர். இவர்களின் நலனுக்காக நண்பகல் உணவுக்காக ரூ. 1,98,392–9–6-ம், புத்தகங்கள் உலக படங்களுக்காக ரூ. 4,537–14–6-ம், துணிகளுக்காக ரூ. 490–7–6-ம் செலவிடப் பட்டது. 608 மாணவர்களுக்கான 16 உணவு விடுதி உறைவிடங்களுக்காக ரூ. 85,550-ம், மாணவர்களுக்கு உதவிச்சம்பளம் மூலம் ரூ. 11,338–15–0-ம் செலவிடப்பட்டது.

இதர நலங்கள்.

பழய பல குடிதண்ணீர் கிணறுகள் பழுதுபார்க்கப்பட்டதுடன் ரூ. 3,311 செலவில் 5 புது கிணறுகள் வெட்டப்பட்டன. ரூ. 4,994 செலவில் 9 இடங் களில் பாலங்கள் அமைக்கப்பட்டன. சர்க்கார் வசமிருந்த நிலங்களிலிருந்து 2,056 நபர்களுக்கும், ஆர்ச்சிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 5,096 நபர் களுக்கும் வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இதுவரை மேற்படி முறைகளில் வழங்கப்பட்ட மனைகளும், தேடித் தரப்பட்ட மனைகளும் முறையே 13,229-ம், 20,231-ம் ஆகும். ஒவ்வொரு மாதம் 30-ம் தேதியன்றும் மாவட்டத்தின் பல்வேறு பாகங்களிலும் ஹரிஜனங்களின் தினம் விமரிசையாக கொண்டாடப் பட்டது.

கிராம நல இலாக்கா

இவ்விலாக்காவின்கீழ் சாலியமங்கலம், தலைஞாயர், வேதாரண்யம், ஆலத்தம்பாடி சரகங்கள் அமைந்துள்ளன. இவ்விலாக்காவினுல் நிறை வேற்றப்பட்ட திட்டங்கள் வருமாறு :—

தண்ணீர் வசதி.

67 கிணறுகள் வெட்டப்பட்டு 62 கிணறுகள் உபயோகத்தில் இருந்தன. 19 பழய கிணறுகள் பழுதுபார்க்கப்பட்டன. 55 கிணறுகளுக்கு மேடைகள் கட்டப்பட்டன. 11 குளங்கள் ஆழப்படுத்தி சுத்தம் செய்யபபட்டன. இவை களுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை பொது மக்கள் உதவி உட்பட ரூ. 70,423–4–0 ஆகும்.

பொக்கு வரத்து.

பொது மக்கள் உதவியது உள்பட ரூ. 64,877–5–0 செலவில் 23½ மைல் நீளத்திற்கு புதுச்சாலைகள் அமைக்கப்பட்டு, 24 மைல் நீளத்திற்கு வண்டி பாதைகளும் நடைபாதைகளும் சீர்செய்யப்பட்டன.

கல்வி.

22 பள்ளிக்கூடங்களும், 26 முதியோர் கல்வி நிலயங்களும் நிறுவப் பட்டன. 20 ஆரம்ப பள்ளிகள் அடிப்படை கல்வி திட்டப்படி மாற்றி அமைக் கப்பட்டன. இவ்வாண்டு நிறுவப்பட்ட 14 மத்திய கிராம வாசகசாலைகளுக் காக 5,039 புத்தகங்கள் வாங்கப்பட்டன. ஏற்கனவே இருந்த 38 கிளை கிராம வாசகசாலையுடன் 17 வாசகசாலைகள் இவ்வாண்டு நிறுவப்பட்டன. 3 புதிய வானொலி கருவிகளும் அமைக்கப்பட்டன. மேற்கண்ட வேலைகளுக்காக செலவு பொது மக்கள் உதவி உள்பட ரூ. 27,368–3–6 ஆகும்.

விவசாயம்.

176,721 எக்கர் தரிசு நிலத்தில் 1,475 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. 6 விவசாயப் பண்ணைகள் துவக்கப்பட்டன. தகுதியான ஏழை விவசாயிகளுக்கு ரூ. 3,000 மான்யமாக கொடுக்கப்பட்டது. இவ்வாண்டு

15 பொலி காளைகளும், 2 பொலி ஆடுகளும் வழங்கப்பட்டன. 11 கோழிப் பண்ணைகளும், 40 தேன்கூடு நிலயங்களும் அமைக்கப்பட்டன. இரண்டு கால்நடைக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

பொது.

ரூ. 1,225 மதிப்புள்ள சர்க்காக்கள் வாங்கப்பட்டன. 10 நூல் நூற்பு போட்டிகள் நடத்தப்பட்டன. 14 பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு ரூ. 3,500 வரை மான்யம் வழங்கப்பட்டது.

உணவு பிரிவு.

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான இம்மாவட்டத்தின் தேவை சுமார் 300,000 டன் அரிசியாகும். சற்றேறத்தாழ 1,600,000 நபர்களுக்கு சொந்தமான சுமார் 1,253,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டது. உணவுக் கொள்முதல் அதிகாரிகளும், 334 நெல் வியாபாரிகளும் பரஸ்பரம் ஒத்து உழைத்து அரசாங்க உததிரவுக்கு இணங்க கொள் முதல் செய்து நெல் லாகவும் அரிசியாகவும் இதர மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்ததுடன், மாவட்டத்தில் உள்ள 6 நகராட்சிகளுக்கும், பல கிராமங்களில் உள்ள 389 நியாயவிலை கடைகளுக்கும் பங்கீடு செய்து பகிர்ந்து அளித்தார்கள். பஞ்சம் தவிர்த்தார்கள்.

பாகிஸ்தான், யுத்தகால இவாக்கிகள்.

நாகை தாலுக்காவில் உள்ள 3 பாகிஸ்தான் இவாக்கிகளின் நஞ்சை நிலங்களும் வீடுகளும் இவாக்கி சொத்துக்களின் உதவி பாதுகாப்பாளர் மேற் பார்வையில் சரிவர நிர்வகிக்கப்பட்டன. யுததகால இவாக்கிகளுக்கு கொடுக் கப்பட்ட கடன் தொகைகள் வசதியுள்ளவர்களிடமிருந்து தவணைகளாக வசூலிக்கப்பட்டன. வசதியற்றவர்கள் கணக்குக்கு தள்ளுபடி செய்யப் பட்டன.

நீதி முறை, ரெவின்யூ இலாக்கா.

ரெவின்யூ பிரிவில் வீடுகள் வாடகை நிர்ணய சட்டப்படி 561 வழக்குகள் பதிவாகின. இவற்றில் 512 வழக்குகள் பைசல் செய்யப்பட்டன.

2. நீதிப் பிரிவு.

இம்மாவட்டத்தில் மேலத்தஞ்சை, கீழத்தஞ்சை என அழைக்கப்படும் இரு நீதி மன்றங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு :—

மேலத் தஞ்சை பிரிவு.—தலைமை இடம் தஞ்சை. இப்பிரிவின்கீழ் உள்ள 2 உப நீதிமன்றங்களிலும், 6 மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும் நடவடிக் கையிலிருந்த வழக்குகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

"தீர்ப்பானவை", "பாக்கி" தலைப்பில் முன்சீப் கோர்ட் சம்பந்தப்பட்ட விவரங்கள் மட்டுமே சேர்ந்துள்ளன.—

இவைகளன்னியில் கிரிமினல் வழக்குகளும், விண்ணப்பங்களும் அதிக மாய் இருந்தன. எல்லா நீதிமன்றங்களின் மூலம் 1952-ம் ஆண்டில் வந்த வருமானம் ரூ. 4,74,186 ஆகும்.

வழக்கின் விபரம்	1951 தாக்கல்.	1951 தீர்ப்பானவை.	1951 பாக்கி.	1952 தாக்கல்.	1952 தீர்ப்பானவை.	1952 பாக்கி
1. அசல் வியாஜ்ஜியங்கள்.	2,674	2,301	1,617	2,197	2,328	1,372 *
2. ஸ்மால்காஸ் வியாஜ்ஜியங்கள்.	6,338	5,827	667	5,848	5,326	595 *
3. மறுமுறை மேல் விசாரணைக்கு வந்தவை.	130	..	..	110	..	..
4. சிவில் விண்ணப்பங்கள்.	317	..	..	272	..	..
5. நிறைவேற்று மனுக்கள்.	70	..	..	51	..	..
6. திவாலா மனுக்கள்.	2	..	..	1	..	..
7. விவசாயக் கடன் நிவாரணச் சட்டப்படி.	..	..	..	55	73	25

கீழ்த்தஞ்சைப் பிரிவு.—தலைமையிடம் நாகை, இப்பிரிவின் கீழ் ஒரு உப நீதி மன்றமும், 5 மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களும், ஒரு ஸ்மால் காஸ் நீதிமன்றமும் உள்ளன. ஸ்மால் காஸ் நீதிமன்றத்திற்கு நாகை மாவட்ட முனிசீப் பிரதான நீதிபதி. அதன் சேர்க்கை நீதிபதியான நாகை அபிஷியல் ரிசீவர், தஞ்சை அபிஷியல் ரிசீவர் வேலையையும் பார்த்து வருகின்றன. முன்னிட்டு, நாகை மாவட்ட முனுசிப்பே சேர்க்கை நீதிபதி அலுவல்களையும் செய்கிறார். நாகைப் பிரிவில் உள்ள நீதி மன்றங்களில் 1952–53-ல் நடவடிக்கையிலிருந்த பலவகைப்பட்ட வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

வழக்கு விபரம்.	ஆண்டு துவக்கத்தில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	தொடரப்பட்ட வழக்குகள், மறு விசாரணை மனுக்கள்.	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.	முடிவுவரை கட்சியாடி முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.
1. அசல் வியாஜ்யங்கள்.	966	2,204	2,272	708
2. ஸ்மால்காஸ் வியாஜ்யங்கள்.	451	4,368	4,382	493
3. அப்பீல் வழக்குகள்.	78	221	198	185

இந்த நீதிமன்றங்கள் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 2,96,695-2-0 ஆகும்.

3. போலீஸ் பிரிவு.

இப்பிரிவினரால் 1952-ம் ஆண்டில் நடவடிக்கைக்கு எடுக்கப்பட்ட குற்றங்களின் புள்ளி விபரங்கள் வருமாறு. கொலை 61, கொள்ளை 28, கூட்டுக் கொள்ளை 13, கன்னக்களவு 1,063, களவு 2,075, கால்நடைக் களவு 375, மதுவிலக்கு குற்றங்கள் 1,860, தான்யக் கள்ளக்கடத்தல் 63.

இவ்வாண்டில் திருவையாறு கோவிலில் ரூ. 64,000, மதிப்புள்ள நகைகள் ஒரு மாஜி போலீஸ் அதிகாரியின் தலைமையில் உள்ள கொள்ளைக் கூட்டத்தால் களவாடப்பட்டதும், கள்ள நாணய தயாரிப்புக்காக ஒருவருக்கு 3 வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டதும், குறிப்பிடத்தக்கனவாகும். விவசாயத் துறையில் நிலமுடையவர்களுக்கும் உழுபவர்களுக்கும் இடையில் பூசல்கள் ஏற்பட்ட காலங்களில் போலீஸார் ரெவின்யூ அதிகாரிகளுடன் ஒத்துழைத்து தகுந்த நடவடிக்கை எடுத்து சட்டத்தையும், அமைதியையும் பாதுகாத்தது போற்றற்குரியது.

* தீர்ப்பானவை பாக்கி தலைப்புகளில் முனிசீப் கோர்ட் சம்மந்தபட்ட விபரங்கள் மட்டுமே சேர்ந்துள்ளன.

4. பதிவுப் பிரிவு.

இம்மாவட்டத்தில் உள்ள பதிவகங்கள் 3 ஜில்லா ரிஜிஸ்தரார்களின் ஆணைக்குள் பட்டன. இவை தஞ்சை, நாகை, புதுக்கோட்டை என்பனவாகும் இந்த 3 பிரிவுகளின் எல்லைக்குட்பட்ட பதிவகங்களின் நடவடிக்கைகளின் புள்ளி விபரங்கள் வருமாறு.

	தஞ்சை.	நாகை.	புதுக்கோட்டை.
1. தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்கள்.	40,467	44,952	4,415
2. உயில்கள் முதலியன.	..	555	..
3. பத்திரங்களால் பாதிக்க பட்ட சொத்துகளின் மதிப்பு ரூ.	3,02,68,651 0 0	4,11,06,560 0 0	28,31,711 0 0
4. பத்திரங்களில் பேரில் விதிக்கப்பட்ட கட்டணம் ரூ.	2,00,542,46 0 0	2,51,364 1 0	17,572 9 6
5. வில்லங்கங்கள் ..	3,311	5,537	..
6. நகல் மனுக்கள் ..	5,556	3,549	..
7. பாதுகாப்பில் வைக்கப் பட்ட உறைகள்.	10	6	..
8. மொத்த வருமானம் ரூ.	2,46,397 0 6	3,19,840 0 0	20,305 9 6

சிறு குற்ற வழக்குகள் ஆய்ந்து தீர்ப்பு அளித்தல்- மழை பதிவு செய்தல் இன்னோர் அன்ன முக்கிய அலுவல்களையும் சில பதிவாளர்கள் மேற்க் கொண்டு பணியாற்றி வந்தனர்.

கூட்டுகள் சங்கங்கள் பதிவுகள்.

இம்மாவட்டத்தில் உள்ள தஞ்சை, நாகைப் பிரிவுகளுக்கு உள்பட்ட கூட்டுகள் சங்கங்களைப்பற்றிய புள்ளி விபரம் வருமாறு.

விபரம்.	எண்ணிக்கை.	
	தஞ்சை.	நாகை.
1. கொடுக்கல் வாங்கல் கூட்டுகள் ..	9	..
2. பொதுக் கூட்டுகள்.	16	13
3. தனிப்பட்டவை	38	36
4. இவ்வாண்டு பதிவு செய்யப்பட்டன.	2	2
5. கலைக்கப்பட்டு வருபவை	6	..
6. அமுலில்லாத கம்பெனிகள் ..	1	2
7. வேறு மாவட்டங்களுக்கு மாற்றப் பட்டவை.	3	1
8. வெளியிலிருந்து இங்கு மாற்றப் பட்டவை.	5	1
9. பெயர்களை மாற்றிக்கொண்டன ..	1	..
10. வழக்குகள் தொடரப்பட்டன ..	5	..
11. பொதுக் கூட்டுகள் தனியாகமாறின.	2	..
12. கூட்டுகளிட்மிருந்து வரவு ரூபாய்	793–10–0.	799–8–0.

சங்கங்கள்.

ஆண்டு ஆரம்பத்தில் இருந்தன. ..	94
புதிதாக பதிவுசெய்யப்பட்டன ..	7
கலைக்கப்பட்டன	6
வரவு ரூபாய்	354-10-0.

5. வியாபார வரி பிரிவு.

இப்பிரிவின் கீழ் அமுல் நடத்தப்படும் சட்டங்களும் அவைகளினுல் வசூலாகும் வருமானமும் பின்வருமாறு.

1. 1939-ம் ஆண்டு சென்னை பொது விற்பனை வரிச்சட்டம்.

வரிசெலுத்தியவர்கள்	5,895
வரிவிலக்கு அளிக்கப்பட்டவர்கள் ..	663
இவ்வாண்டு/8/அ/ பிரிவின்படி பதிவு செய்யப்பட்டவர்கள்.	9,523
கம்பவுண்டிங் நடவடிக்கை எடுக்க பட்டவர்கள்.	3,631
ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ..	254
ஜப்தி நடவடிக்கை எடுத்தது	59

	ரூ.	அ.	பை.
விற்பனை வரி வசூலானது	5,82,297	5	10
வசூலாக வேண்டியது	1,72,853	4	5
பதிவு தொகை மூலம் வருமானம் ..	78,521	0	0
இதர வருமானங்கள்	36,674	14	10

2. சென்னை வேடிக்கை விநோத வரி சட்டம்.

நடந்த காட்சிகள்	35,258

	ரூ.	அ.	பை.
வேடிக்கை வரி	5,43,191	15	9
அதிகப்படி வரி	28,320	8	0
இதர வருமானம்	1,177	0	0
கம்பவுண்டிங் நடவடிக்கைகள் ..	110	0	0
ஒழுங்கு நடவடிக்கைகள்	13		

3. சென்னை மோட்டார் விற்பனை வரிச் சட்டம்

	ரூ.	அ.	பை.
வரிகள் மூலம்	3,32,311	7	3
இதர வருமானம் மூலம்	85	0	0

(2) மராமத்து.

1. ஆற்றுப் பிரிவு.

நீர்பாய்ச்சலாதாரங்களில் கட்டுப்பாட்டுக்கும், பராமரிப்புக்குமாக இயங்கும் காவேரி, வெண்ணாறு. கல்லணை கால்வாய் ஆகிய நிர்வாக பிரிவுகளின் 52-53-ல் நடந்த பலவேலைகள்பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

காவேரிப் பிரிவு.—இப்பிரிவு கீழ்கொள்ளடம் அணைக்கட்டு பகுதி, காவேரிப்படுகை பகுதி ஆகியவற்றிற்கு பாய்ச்சல் வடிகால் வசதிகளை கண் காணித்து வருகிறது. மேட்டூர் அணையில் ஜூன் மத்தியில் தண்ணீர் மட்டம் 15·45 அடியாகவே இருந்தாலும் பருவமழை தவரி நீர்மட்டம் தகுந்த அளவு உயராமல் போனதாலும் மிக்க சிரமத்துடன் கிடைத்த தண்ணீரை பகிர்ந்தளிக்கப்பட்டது. பிப்ரவரி கடைசியில்கூட தாளடிக்காக தண்ணீர் விடப் பட்டது.

இப்பிரிவின் பாதுகாப்பிற்காக ரூ. 8,65,573-ம் அபிவிருத்திக்காக 1,24,848-ம் கீழ்கொள்ளிட பகுதியில் பாதுகாப்புக்காக ரூ. 52,497-ம் அபி விருத்திக்காக ரூ 6,140-ம் செலவாகியுள்ளன. 1, 2, 3-4, ஏ-4 பி, 6, 7, 8 இத் திட்டங்களுக்காக முறையே ரூ. 38,036, ரூ. 73,436, ரூ. 86,167, ரூ. 53,160, ரூ. 1,76,003, ரூ. 1,05,872, ரூ. 6,77,819, ரூ, 24,284, செலவாயின. ரூபாய் 10,000 செலவில் அனுமதிக்கபட்ட 5-வது திட்டமாகிய சிங்கார வடிகால் திட்டம் இன்னும் வேலை தொடங்கவில்லை.

வெண்ணாற்று பிரிவு.

இப்பிரிவு வெண்ணாற்று பகுதியில் உள்ள பாய்ச்சல் வடிகால் வசதிகளை கண் காணித்து வருகிறது. இப்பிரிவின்கீழ் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்ட சில வளர்ச்சி திட்டங்களின் விபரம் வருமாறு.

	ரூ.
சாமந்தன் காவேரி வாய்க்கால்	3
சீராவட்டனரிலிருந்து ஒரு புதிய வாய்க்கால்.	1,133
காவேரி படுகை வடிகால் திட்டம்	18,196
முள்ளியாறு கடைக்கோடி திட்டங்கள ..	1,56,238
முள்ளியாறு இயந்திர இறவைபாசன திட்டம்.	20,108
பாமணி தெற்குராஜன் வாய்க்கால் மின்சார இறவை பாசன திட்டம்,	1,492
மன்னார்குடி தாலுக்கா குடிதாங்கிச்சேரி முதலான கிராமங்களுக்கு பாசனதிட்டம்.	7,525
முள்ளியாற்றங்கரை 1/5 மைல் கல்லில் கட்டப்படும் பாலம்.	4,950
மற்ற ஆறுகள் வாய்க்கால்கள் செப்பனிடப் பட்டது.	6,92,760
வேதாரண்யம் கால்வாய் அபிவிருத்தி திட்டம்.	100

கல்லணைக் கால்வாய் பிரிவு.

கல்லணைக் கால்வாய் வடவாறு ஆகிய நதிகளின் பகுதிகளின் பாய்கால் வடிகால் வசதிகளை கண்காணித்துவரும் உப்பிரிவின் கீழ் நிறைவேற்றப் பட்ட சில வளர்ச்சி திட்டங்களின் விபரம் வருமாறு.

திட்டத்தின் பெயர்.	குறிப்பு.
1. ஒலவயல் வாய்க்கால் விஸ்தரிப்பு திட்டம்.	1,035 ஏக்கர் சாகுபடி.

திட்டத்தின் பெயர்.	குறிப்பு.
2. அக்கரை வட்டம் வாய்க்கால்	257 ஏக்கர் சாகுபடி.
3. அலிவலம் வாய்க்கால்	புதுக்கோட்டை நிலங்களுக்கு வசதியளிக்கிறது.
4. அரசேரி ஏரியிலிருந்து கேணிக் குளம் வரை வடிகால் வெட்டுதல்.	80 ஏக்கர் பாசனம் 170 ஏக்கர் நீர்ப் பிடிப்பிலிருந்து நிவர்த்தி.
5. கண்ணனாற்றுக் வலதுகரை போடுதல்.	....
6. பீமனோடை வடிகாலை விரிவு படுத்தல்.	250 ஏக்கர் நீர்ப்பிடிப்பிலிருந்து நிவர்த்தி.
7. மன்னார்குடி மெயின் வாய்க் காலிலிருந்து புதிய வாய்க் கால் வெட்டல்.	எதிர் பார்க்கப்பட்ட அளவாகிய 250 ஏக்கரில் 150 எக்கர் சாகுபடிக்கு வந்து விட்டது.

இந்த நிர்வாக பிரிவின் கீழ் புதிய திட்டங்களுக்காக ரூ. 2,19,061-ம், பழய திட்டங்களுக்காக ரூ. 16,384-ம், மராமத்துக்காக ரூ. 6,60,867/ம் செலவாயிற்று.

2. கட்டிடப் பிரிவு.

காவேரிக்கட்டிட பிரிவு.—தஞ்சையிலுள்ள தலைமை மருத்துவ நிலையம், அரண்மனை, சிறை அரசாங்க கட்டிடங்கள், அரசாங்க ஊழியர்களின் சர்க்கார் குடியிருப்பு வீடுகள் இவைகளை இந்த பிரிவுகள் கண்காணித்து வருகிறது.

வெண்ணாற்று கட்டிட பிரிவு.—இந்த பிரிவுகளின் கீழ் உள்ள எல்லா சர்க்கார் கட்டிடங்களின் அபிவிருத்திக்காக செலவு செய்துவரும் தொகை நீங்கலாக, புயலால் சேதமடைந்த கட்டிடங்களை சீர்செய்யமட்டும் ரூ. 93,832 செலவாகியது. திருததுரைப்பூண்டி, மன்னார்குடி மருத்துவச்சாலைகளுக்காகமட்டும் ரூ. 15,546-ம், ரூ. 1,965-ம் செலவுசெய்து புதியகட்டிடம் கட்டப்பட்டது. பழுதுபார்க்கப்பட்டது.

3. நெடுஞ்சாலைப் பிரிவு.

இம் மாவட்டத்திலுள்ள தஞ்சை, நாகை, நெடுஞ்சாலை பிரிவுகளின் பலதிறப்பட்ட பணிகள் வருமாறு.

தஞ்சை பிரிவு.—நெடுஞ்சாலைகள், நாடாட்சி பெருஞ்சாலைகள் ஆகிய 1,388 மைல் நீளமுள்ள சாலைகள் ரூ. 21,19,086 செலவில் சீர்செய்யப்பட்டன. 25½ மைல் நீளத்திற்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டதுடன் 6 மைல் 3 பர்லாங் நீளத்திற்குள்ள சாலைகளுக்கு தார் போடப்பட்டது. ரூ, 3,70,000 செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தஞ்சை–திருவையாறு நெடுஞ்சாலையில் ரூ. 1,86,616 செலவில் சிமிண்டு சாலை அமைக்கப்பட்டது. மன்னார்குடி-திருவாரூர் சாலை சீர் அமைப்பு வேலையும், மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலையைக்குறிக்கிடும் கண்ணற்றிறகு பாலமும், ஒரத்தநாடு-திருவோணம் சாலையில் மகாராஜபுரத்தில் ஒரு தாழ்ந்த பாலமும் அமைக்க ஏற்பாடாகி வேலை நடந்துவருகிறது.

நாகை பிரிவு.—இப் பிரிவின் கீழ் இவ்வாண்டில் சுமார் 1,405 மைல் நீளத்திற்குள்ள சாலைகள் சீர்செய்து காக்கப்பட்டன. கப்பிச்சாலையாக இருந்த 42 மைல் சாலைகள் கருங்கல் சாலைகளாகவும், 14 மைல் கருங்கல் கப்பிச்சாலைகள் தார் சாலைகளாகவும், 5 மைல் மண் சாலைகள் கப்பிச் சாலைகளாகவும் மாற்றப்பட்டன. புதிதாக 9 மைலுக்கு சாலைகள் போடப்

பட்டதுடன் 11 மதகுகளும் கட்டப்பட்டன. இப் பிரிவின்கீழ் உள்ள கல்வித் துறைக் கட்டிடங்களுக்கு மாத்திரம் ரூ. 33,907 செலவு செய்யப்பட்டு சீர் செய்யப்பட்டது.

4. மீன் ஆற்றல் பிரிவு.

தஞ்சை மாவட்டத்தில் மீன் ஆற்றல் வழங்கிவர நால்வருக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. இவர்களுக்கு மின்சாரம் உதவ தஞ்சை, திருவாரூர், நாகை இவ்விடங்களில் ஆட்சியாளரின் உப நிலையங்கள் உள்ளன. மேலும் இவ்வாண்டில் கும்பகோணம், மாயூரம் இவ்விடங்களில் இரண்டு உப நிலையங்களை புதுப்பித்துள்ளார்கள்.

5. வானொலி.

இம்மாவட்டத்திலுள்ள நான்கு வானொலி கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில் 98 வானொலிகளும், 2 ஒலிபெருக்கிகளும் வேலைசெய்து வருகின்றன. தஞ்சை ஜில்லா கிராம முன்னேற்ற சீர்திருத்த உந்து வண்டிகளிலுள்ள வானொலி பெட்டிகளும், ஒலி பெருக்கிகள், திரைப்படக்காட்சி கருவிகள் ஆகியவைகளும் மேற்பார்வையிடப்பட்டு வருகிறது.

(3) பொது நலம்.

1. உடல் நலப் பிரிவு.

நகராட்சி எல்லைகளில் நகராட்சிகளும், மற்ற எல்லைகளில் ஜில்லா போர்டும் மக்கள் நலம் புரிந்து வந்தன.

ஜில்லாபோர்டு ஆட்சியின் கீழ் மாவட்டம், 19 உடல் நல மேற்பார்வை வட்டங்களாக பிரிக்கப்பட்டு அமுலில் நடத்தப்பட்டது.

இறப்பும் பிறப்பும்.—இவ்வாண்டு பதிவான பிறப்புகள் 57,762, இறப்புகள் 35,2 1, சிசுமரணம் 4,802, பிரசவமரணம் 300, காய்ச்சலால் மரணம் 2,963, வயிற்றளைவாள் 4,441, சுவாசநோயால் 5,658, வாந்திபேதியால் 1,331, பெரியம்மையால் 175, மற்றவை இதரகாரணங்கள்.

மக்கட்பேரும் மருத்துவ உதவியும்.—ரூ. 55,880-ம் செலவில் 29 மருத்துவப் பெண்களும், 28 ஆயாள்களும், 4 உடல்நலக் கண்காணிப்பாளர்களும் 2 பெண் மருத்துவ அதிகாரிகளும் இத்துறையில் பணியாற்றி வந்தனர்.

அம்மை வைத்தல்.—இவ்வாண்டு முதல் முறையாக 93,307 பேர்களுக்கும், மறுமுறையாக 258,928 பேர்களுக்கு அம்மை வைக்கப்பட்டது.

நாய்க்கடி சிகிச்சை.—நாய்கடியுண்ட மக்களுக்கு தஞ்சை தலைநகர மருந்துவ விடுதியில் சிகிச்சை தரப்பட்டது. வெறி நாய்களை "Cyanagas—A" மருந்தினால் அழிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

குடிதண்ணீர் சுகாதாரம்.—ஜில்லா போர்டு ஆட்சியாளரால் மட்டும் 11 புதிய கிணறுகள் குடிதண்ணீருக்காக தோண்டப்பட்டன. 24 கிணறுகள் பார்வையிடப்பட்டன. வீடுகளுக்காக தனிகழிவிடங்கள் கட்டும் திட்டப்படி 375 கழிவிடங்கள் கட்டப்பட்டன.

2. மருத்துவசாலைப் பிரிவு.

இம்மாவட்டத்தில் ஜில்லாபோர்டு ஆட்சிக்குட்பட்டு ஆங்கில முறையில் 66-ம், இந்தியமுறையில் 49-ம், அரசாங்கத்திற்குட்பட்டு 7-ம், நகராட்சிக்குட்பட்டு 12-ம் மருத்துவ சாலைகள் உள.

ஆக்கவேலைகள்.—புதிய நலங்கள்.—தஞ்சை தலைநகர மருத்துவச் சாலையில் உள்ள படுக்கைகள் 500 லிருந்து 636 ஆக உயர்த்தப்பட்டன. வழக்கம் போல் நடத்தப்பட்ட கம்பவுண்டர் தொழில் பயிற்சியையும் மருத்துவச்சி தொழில் பயிற்சியையும் அண்மையில் கிராம பயிற்சி திட்டப்படி 163 பேர்களுக்கு வைத்திய பயிற்சி இவ்வாண்டில் அளிக்கப்பட்டது.

தாலூக்கா தலைநகர மருத்துவச் சாலைகள் அமைப்புதிட்டத்தின் கீழ் தோட்டி முதலான கீழ்தர சிப்பந்திகளுக்கு கல்லணைக்கால்வாய் புறம்போக்கு நிலப்பரப்பில் ரூ. 1,07,000 செலவில் வீடுகள் கட்ட சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர். தஞ்சையில் ஒரு சேமிப்பு அறையும், மாயவரம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் புதுக்கட்டிடங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பண்டாரவாடை, கிளியனூர், வடசேரி ஆகிய கிராமங்களில் உள்ள மருத்துவச்சாலைகளுக்கு பொதுமக்களே கட்டிடங்கள் வழங்கியுள்ளனர், தஞ்சை மருத்துவச்சாலையில் பிரசவ அறைக்காக, தஞ்சை ரோட்டரி கிளப் ரூ. 50,000 உதவி செய்துள்ளது. மன்னார்குடி, திருத்துறைப்பூண்டியில் உள்ள மருத்துவச்சாலைகளுக்கு கௌரவ ஆண், பெண் வைத்தியர்கள் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக எல்லா மருத்துவசாலைகளும் மாவட்டமருத்துவ அதிகாரியாலோ அல்லது இதர அரசினர் வைத்திய அதிகாரிகளாலோ மேற்பார்வையிடப்பட்டு வந்தன.

3. கல்வித்துறை பிரிவு.

கல்லூரிக்கல்வி.—பி. எஸ். சி. வகுப்புக்கள் வரை உள்ள கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இவ்வாண்டு இறுதியில் 912 மாணவர்களும், 32 மாணவிகளும் கல்விகற்றனர். இக்கல்லூரியிலுள்ள தேசியப் போர்படை பயிற்சியில் 139 மாணுக்கர்கள் கலந்துகொண்டு தொண்டாற்றினர். திருவையாற்றில் ஜில்லாபோர்டாராலும், திருப்பனந்தாள், தருமபுரத்தில் அந்தந்த ஆதீன கர்த்தாக்களாலும் தமிழ் வடமொழிக் கல்லூரிகள் வழக்கம்போல் செவ்வனே நடந்தப்பட்டு வந்தன.

உயர்தரக் கல்வி.—61 பள்ளிக்கூடங்களில் 37,482 மாணவர்களும், 4,600 மாணவிகளும், கல்விபயின்றனர். 4 உயர்தரபள்ளிகளில் தொழிற் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன.

ஆரம்பக் கல்வி.—1,908 ஆரம்பபள்ளிகளில் மொத்தம்142,953 மாணவர்களும், 71,056 மாணவிகளும் கல்விகற்றனர். தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று 116 பள்ளிகளும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கென 4 பள்ளிகளும் உள்ளன. ஆரம்ப கல்விக்காகமட்டும் ஆகும் அரசாங்கச்செலவு சுமார் ரூ. 23,89,073 ஆகும்.

ஆதாரக் கல்வி.—ஆதாரக்கல்வி பயிற்சிப்பள்ளிகள் வேதாரண்யம், குருக்கத்தி, திருச்சிற்றம்பலம் ஆகிய ஊர்களில் திறம்பட இயங்கிவந்தன. பெண்களுக்காகவும் ஒரு ஆதார பயிற்சி பள்ளி நடந்துவந்தது. 2 புதிய ஆதார பாடசாலைகள் திறக்கப்பட்டன.

முதியோர் கல்வி.—புதிதாக துவக்கப்பட்ட 43 பள்ளிகள் உள்பட 143 முதியோர் கல்வி நிலையங்களில் 3,747 முதியோர்கள் கல்வி பயின்றனர். முதியோர்கல்வி ஆசிரியர் பயிற்சி பள்ளி ஒன்று தஞ்சையில் ஏற்படுத்தப்பட்டு 278 ஆசிரியர்கள் பயிற்சி முடித்துள்ளார்கள்.

ஆசிரியர் பயிற்சி பள்ளிகள்.—தஞ்சை ஆசிரியர் பயிற்சிபள்ளியில் இவ்வாண்டு 505 மாணவர்கள் ரூ. 68,743 உபகாரச் சம்பளத்துடன் பயிற்சி பெற்றனர்.

பொது.—மாவட்டத்திலுள்ள இதர விசேஷ பாடசாலைகள் சம்பந்த மான விபரங்கள் வருமாறு.

பள்ளிக்கூட பெயர்.	படித்த மாணவர்களின் எண்ணிக்கை.
1. குட்டநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவரும் குழந்தைகள் கல்லூரி குடந்தை.	57
2. விவசாயபயிற்சிபள்ளி உரத்தநாடு ..	21
3. சிறுவர் சீர்திருத்த பள்ளி, தஞ்சை.	562

4. கூட்டுறவு பிரிவு.

இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவு இயக்கங்களின் விவரம் வருமாறு :—

இயக்கத்தின் விபரம்.	தஞ்சை பிரிவு.		குடந்தை பிரிவு.	
	எண்ணிக்கை.	விபரம்.	எண்ணிக்கை.	விபரம்.
1. கூட்டுறவு நாணய சங்கங்கள்	651	....	810	....
2. நிலஅடமான சங்கங்கள்	3	....	6	....
3. விற்பனை சங்கங்கள்	10	....	9	....
4. கூட்டுறவு மளிகைகள்	28	ரூ. 36,96,967 பெருமானமுள்ள சரக்குகள் வாங்கி விற்கப்பட்டன.	422.	ரூ. 19,89,087 மதிப்புள்ள சரக்குகள் வாங்கி விற்கப்பட்டன.
5. நில சீர்சிருத்த கூட்டுறவு நிலையங்கள்.	35	இவ்வாண்டு 50 ஏக்கர் நிலம் சீர்திருத்தப்பட்டது.	2	....
6. குடியேற்றச் சங்கங்கள்	6	524 அங்கத்தினர்கள்; 981 ஏக்கர் நிலம் புதிதாக சாகுபடி செய்து 4,775 டன் உணவு பொருள் உற்பத்தி செய்யப்பட்டது.	1	750 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு லாயக்காக உள்ளது.
7. கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள்.	7	80 ஏ. 42 செ. நிலம் வாங்கி 189 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.		....
8. பனைவெல்ல உற்பத்தி விற்பனை சங்கங்கள்.	39	....	48	....
9. கைத்தறி நெசவாளர் சங்கங்கள்.	3	ரூ,2,53,895 மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டன.	19	ரூ. 11,81,957 மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.
10. பால் விற்பனை சங்கம்.	36	ரூ.4,51,932மதிப்புள்ள பால் விற்பனை செய்யப்பட்டது.	23	ரூ, 1,58,093 மதிப்புள்ள பால் விற்பனை செய்யப்பட்டது.

மாஜி ராணுவத்தினரின் நலனுக்காக குடந்தையில் ஒரு உலோகவேலைச் சங்கமும் தஞ்சையில் ஒரு கூட்டுறவு மோட்டார் போக்குவரத்து சங்கமும் திறம்பட நடந்து வந்தன. கும்பகோணம் சுந்திரபெருமாள் கோவில் ஆகிய இடங்களில் உள்ள கயிர் திறிக்கும் சங்கங்களில் 22 ஆண், 37 பெண் அங்கத்தினர்கள் உழைப்பின்மூலம் ரூ. 3,64,686 மதிப்புள்ள சரக்குகள் தயாரிக்கப்பட்டன.

5. மாதர் நலப்பிரிவு.

இது சமூகப்பொருளாதார வாழ்வு, பண்பாடு முதலியவற்றை உயர்த்திட வாழ்க்கையை வளம்படுத்த முயலுகிறது. ஆரோக்கியம், சுகாதாரத்துக்கான வழிமுறைகளை கற்றுக்கொடுத்தல், பிரசவ சிசு சம்ரட்க்ஷணை, குடிசைத்தொழில், வேலையில்லாதவர்களுக்கு வேலை தேடித்தருதல், குடும்ப நலனுக்காக பாடுபடுதல் முதலியவைகளை இந்த பிரிவு கவனிக்கிறது.

6. தொழிற்சாலை தொழிலாளர் பிரிவு.

இம் மாவட்டத்தில் 559 தொழிற்சாலைகளும், 14,621 ஸ்தாபனங்களும் உள்ளன. 9 நபர்களுக்குமேல் வேலைசெய்யும் எல்லா தொழிற்சாலைகளை, தொழிற்சாலை சட்டமும், எல்லா நகரங்களிலும், பெரிய பஞ்சாயத்துகளிலும் உள்ள ஸ்தாபனங்களை, கடைகளையும், ஸ்தாபனங்களையும் குறித்த சட்டமும் கட்டுபடுத்துகின்றன. இவைகளின் விதிகளின்படி தொழிலாளர்களுக்கும் தொழில் அதிபர்களும் நடந்து வருகிறார்களா? என்பதை மாவட்ட தொழிற்சாலை அதிகாரியாலும், 11 உதவி தொழிலாளர் அதிகாரியாலும் பார்வையிடப்பட்டது. இம் மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட தொழிலாளர் வர்க்கத்தாருக்கு குறைந்தகூலிச் சட்டப்படி கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. நெல் அறவை தொழிற்சாலை.
2. புகையிலை தொழிற்சாலை.
3. எண்ணை தொழிற்சாலை.
4. பப்ளிக் மோட்டார் டிரான்ஸ்போர்ட்டு ஊழியர்கள்.
5. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

7. இந்துமத அறநிலய பாதுகாப்பு பிரிவு.

அறிக்கை ஆண்டில் 12 கோவில்களுக்கு கும்பாபிஷேகங்கள் நடந்தன. 32 கோவில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டன. 5 கோவில்களில் யாத்திரீகள் தங்குவதற்குண்டான வசதிகள் செய்யப்பட்டன.

இந்த மாவட்டத்தில் புதிதாக 21 கோவில்கள் இப்பிரிவின் ஆதிக்கத்திற்கு கொண்டுவரப்பட்டன. எல்லா கோவில்களிலுமாக சேர்த்து உண்டியல் இதரவகை மூலம் வசூல் ரூ. 25,922–15–7 கிடைக்கப்பெற்றது. கோவில்களுக்கு சொந்தமான நிலப்பரப்பு 129,390–26 ஏக்கர்கள் ஆகும்.

கோவில் நிதிகளிலிருந்து ரூ. 25,000 மூலதனத்தில் வைத்தீஸ்வரன் கோவிலில் ஒரு அனுதை விடுதியும், ரூ. 5,500 மூலதனத்தில் நாச்சியார் கோவிலில் ஒரு அனுதை விடுதியும் நடத்தப்பட்டன.

8. தீயணைப்பு படையினர்.

இம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளிலும் உள்ள தீயணைப்பு படையினரால் செய்யப்பட்ட சேவைக்கு புள்ளிவிபரங்களாவன :—

விபரம்.	எண்ணிக்கை அல்லது தொகை.
1. மொத்த தீ விபத்துகள்	270
2. மொத்த சேதம்	ரூ. 1,25,315 0 0
3. கோர விபத்துகள்	1
4. கோர சேதம்	ரூ. 80,000 0 0
5. தீயணைப்பு படையினரின் ஊர்திகள் சேவை மூலம், வாடகை வருமானம்.	ரூ. 6,113 0 0
சந்தர்ப்பங்கள்	535
6. ஷை இலவச சேவை	30
7. பொருட்காட்சி சந்தை முதலியன	22
8. ஷை இனங்களில் வருமானம்	ரூ. 843 0 9

தீயணைப்பு படையினரின் நாகைப்பிரிவினர் 1952-ம் ஆண்டு நவம்பர் மீ 30உ அடித்த புயலன்று நாகை மருத்துவ சாலையினின்று கடல்கொள்ள விருந்த 200-க்கு மேற்பட்டவர்களை வெளியேற்றினதாவது போற்றற்குறிய நிகழ்ச்சியாகும்.

(4) இயற்கை வளங்கள்.

1. விவசாயப் பிரிவு—தஞ்சைப் பிரிவு.

பொறுக்கு விதைகள்.—இவ்வாண்டு இப்பிரிவில் 1993 எக்கராக்கள் பயிரிடப்பட்டும், சர்க்கார் பண்ணைகளிலிருந்தும் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. உவர் நிலங்களுக்கு எஸ். ஆர். பி. 26 பி. பொருக்கு விதை பெருவாரியாக பயன்படுத்தப்பட்டது. சர்க்கார் பண்ணையிலிருந்து கிடைத்ததை தவிர 519 டன் நெல் விதைகள் வாங்கி வழங்கப்பட்டன.

உரங்கள்.—பசுந்தழை உரத்தின் முக்கியத்தை அனுசரித்து 64,287 எக்கரா வயல்வரப்புறங்களில் தாளடி பயிருக்காகவும் விதை சேகரிப்பதற் காகவும் சீமை அகத்திச் செடிகள் நடப்பட்டன. 870 எக்கராக்களில் கிளரிச்சீடியா செடிகள் நடப்பட்டன. 17 டன் சீமை அகத்தி விதையும் வாங்கப்பட்டது. சாலை ஓரங்களில் 170 மைல் நீளத்திற்கு சீமை கருவேல் முள் செடி விதைகள் ஊன்றப்பட்டன.

இவ்வாண்டு 4,857 டன் கலப்பு உரம் தயாரிக்கப்பட்டதில் 3,957 டன் நிலங் களுக்கு உரமாக இடப்பட்டது. உர உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு 4 விவசாயிகளுக்கு அவர்களது தேர்ச்சிப்பற்றி நற்சாட்சி பத்திரங்கள் தஞ்சை மாவட்ட அதிகாரியால் வழங்கப்பட்டன. மொத்தம் 3,467 டன் இரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு விற்கப்பட்டன. விவசாயிகளை ஊக்கு வான்வேண்டி அரசினரால் 6 நபர்களுக்கு தாலூக்கா சிறந்த விளைவு பரிசு களும் ஒருவருச்கு மாவட்ட பரிசும், மேலும் 14 விவசாயிகளுக்கு ரூ. 300 மதிப்புள்ள பரிசுகளும் வழங்கப்பட்டன.

குழாய்க் கிணறுகள்.—இம் மாவட்டத்தில் 102 குழாய் கிணறுகள் வைக்கப்பட்டுள்ளன.

நோய் தடுத்தல்.—பயிர்களை பாதிக்கும் பூச்சி, பூன் சாவி நோய்களை தடுக்க 9 டன் நிறையுள்ள மருந்துகள் பாதிவிலைக்கும் இம் மருந்துகளை தெளிப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் இலவசமாகவும் விவசாயிகளுக்கு கொடுத்துதவப்பட்டது. எலி வெட்டுவதை தடுக்க வின்ஸ் பான்பைட்டும், கிட்டியும் உபயோகப்படுத்தப்பட்டன.

விவசாய இயந்திரப் பிரிவு.—டிராக்டர்கள் மூலம் 4,320 எக்கர்கள் உழவு செய்யப்பட்டது. 16 குழாய் செட்டுகள் குறுகிய காலங்களுக்கு விவசாயி களுக்கு வாடகைக்குவிடப்பட்டன. நீர்ப்பாசனத்திற்காக விற்பனை செய்யப் பட்ட குழாய்களின் மொத்த நீளம் 5,834 அடியாகும்.

ஆடுதுறை பண்ணை.—இப் பண்ணையிலிருந்து குழாய்க் கிணறுகள் உதவி யினாலும் பசுந்தாள் ரசாயன உரத்தின் உதவியினாலும் பருவ மழை பொய்த்திருந்தும் முந்திய ஆண்டுகளை விட அதிக அளவு நெல் உற்பத்தி செய்யப்பட்டு 208,842 ராத்தல் விதை நெல் வழங்கப்பட்டது. புதிய நெல் வகைகளாகிய A. D. T. 24, A. D. T. 25 இவைகள் கண்டுபிடிக்கப்பட்டு தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

சாதனைகள்.—ஒரு எக்கர் நிலத்திலிருந்து 10 எக்கர் நிலத்திற்கு போடு வதற்கு போதுமான 60,000 ராத்தல் சீமை அகத்தி பசுந்தாள் உரம் கிடைப்பதையும், கிளரிசிடியா என்னும் செடி ஒன்றிலிருந்து ஓராண்டுக்கு

30 ராத்தல் பசுந்தாள் உரம் கிடைப்பதையும் நிரூபித்துக் காட்டப்பட்டன. மீன் வளப்பு முறையில் உண்டாகும் மிச்சத்தை விவசாயிகளுக்கு நிரூபித்துக் காட்டப்பட்டது.

பட்டுக்கோட்டைப் பிரிவு.—ஆராய்ச்சிப்பண்ணை பத்துவித குருவை விதைகளை பரிசோதனைகள் செய்ததிலிருந்து ஆடுதுறை 14-ம் நம்பர் நெல்/குருவை. அதிக மகசூல் தருவதாக கண்டுபிடிக்கப்பட்டது. இதே போல் சம்பா நெல்லில் A.D.T. 8-ம், சி. ஓ. 25-ம் அதிக மகசூல் தருவதாக கண்டுபிடிக்கப்பட்டது. கேழ்வரகில் அனகாபள்ளி 1-ம் நம்பர், பானூர் 1-ம் நம்பர், கோயமபுத்தூர் 3-ம் நம்பர் 2-ம் நம்பர், இவைகளை பரிசோதனை செய்ததில் அனகாபள்ளி 1-ம் நம்பர் ஏக்கருக்கு 2,133 பவுண்டு மகசூலைக் கொடுத்தது. நிலைக்கடலை திண்டிவனம் நம்பர் 2-ம், கொட்டை முத்து திண்டிவனம் 3-ம் நம்பர் நல்ல மகசூலைக் கொடுத்தன.

சாத்தூர் மிளகாய் 5 செண்டு நிலத்தில் பயிரிடப்பட்டு 230 பவுண்டு 8 அவுன்ஸ் வற்றலும், 7,800 கன்றுகளும் விற்கப்பட்டன.

பழச்செடிகள்.—

வகை	தயாக்க்கப்பட்டவை. கன்றுகள்.	விற்கப்பட்டவை.	நடப்பட்டவை.
பலா	350	189	..
நேபாளி எலுமிச்சை	575	332	12
நாட்டு எலுமிச்சை	750	194	10
சிங்கப்பூர்பலா	64	12	5
சிட்ரன்	25	12	..
விதையில்லா கொய்யா	..	..	2

2. கால்நடை

தஞ்சை மாவட்டததில் 13 கால்நடை வைத்தியசாலைகளும் 6 ஊர் சுற்றும் மருத்துவ நிலையங்களும் இவ்வாண்டு பணியாற்றின. ஆலத்தம்பாடி பிர்க்கா அபிவிருத்தி கோழிப்பண்ணை அபிவிருத்தி திட்டங்கள் இவ்வாண்டு வகுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 609 கால் நடைகளுக்கு உள் சிகிச்சையும், 28,059 கால்நடைகளுக்கு வெளி சிகிச்சையும் கொடுக்கப்பட்டன. கொள்ளை நோயால் தாக்கப்பட்ட 880 கால்நடைகளில் 669 இறந்துவிட்டன.

கிராம அபிவிருத்திக்கு கிராம கால்நடை அபிவிருத்தி திட்டமும், உயர்தர கோழிகளை வளர்த்து நாட்டுக் கோழிகளை பொலியவைத்து வளர்ப்பதற்கான கோழி அபிவிருத்தி திட்டம் ஒன்றும் சாலிய மங்களத்தில் உள்ளன. கோழிப்பண்ணைகளை வளர்க்கும் விதத்தை விளக்க தஞ்சையில் வெண் ரகத்திற்கும், நாகையில் சிலைப்பு ரகத்திற்கும் காட்சிப்பணைகள் உள்ளன.

இடம்.	அடைகாக்க வைத்த முட்டைகள்.	உருவான கோழிகள்.	உணவிற்கு விற்ற முட்டைகள்.	செலவு. ரூ.	வரவு. ரூ.
தஞ்சை	1411	79	1905	496-10-3	884-0-0
நாகை	813	33	396	815-3-6	410-8-3

இவ்வாண்டு சாலியமங்கலம், திருக்களர், ஆலத்தம்பாடி ஆகிய ஒன்று இடங்களில் கால்நடை கண்காட்சிகள் நடந்தன.

3. காடுகள்

இவ்வாண்டு திருத்துரைப்பூண்டியிலிருந்த வனவிலாகா காரியாலயம் மன்னார்குடிக்கு மாற்றப்பட்டது.

இலக்கா கட்டிடங்கள் புயலில் சேதமடைந்து ரூ. 1,683–2–0 செலவில் சீர் செய்யப்பட்டன.

கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள்

1.	திருட்டுத்தன குற்றங்கள்	113
2.	ஷி மேய்ச்சல்	63
3.	இதர குற்றங்கள்	34

இதர புள்ளி விவரங்கள்.

1.	அப்புறப்படுத்தப்பட்ட விறகு	24,975 கன அடி		
2.	சவுக்கு சாகுபடி செய்யப்பட்டது	47 ஏக்கர்		
		ரூ.	அ.	பை.
3.	கால்நடை மேய்ச்சல் வரவு	910	10	0
4.	சில்லரை மகசூல் வரவு	332	0	0
5.	பாசிக் குத்தகை வரவு	3,500	0	0
6.	எருத்தழை விற்பனை வரவு	2,589	0	0
7.	ஆண்டுச் செலவு	23,671	5	3

4. துறைமுகங்கள்

இம் மாவட்டத்தில் உள்ள நாகைப்பட்டிணம். திருமுல்லைவாசல் தோப்புத்துறை ஆகிய துறைமுகங்களில் நாகப்பட்டிணத்தில்மட்டுமே போக்கு வரத்துக்கள் உள்ளன. அவைப்பற்றிய புள்ளி விபரங்கள் வருமாறு :—

1.	துறைமுகம் புகுந்த கப்பல்கள், படகுகள்	55 அண்டு 181		
2.	ஷி ஷி ஷி எடை	193,469 டன்கள்		
3.	ஷி விட்டுச்சென்ற கப்பல்கள் படகுகள்	55 அண்டு 175		
4.	ஷி எடை	193,267 டன்கள்		
5.	கப்பலில் வந்திரங்கியவர்கள்	9411 பேர்கள்		
6.	ஷி சென்றவர்கள்	15592 பேர்கள்		
		ரூ.	அ.	பை.
7.	வசூலிக்கப்பட்ட துறைமுகக் கட்டணம்	10,576	7	6
8.	ஏற்றுமதி இறக்குமதி கட்டணங்கள்	19,884	14	6
9.	நிலவாடகை	456	12	5
10.	கொட்டகை வாடகை	2,740	1	0
11.	பிரயாணிகள் சங்கம்	12,388	0	0
12.	30–11–52-ல் அடித்த புயலினால் ஏற்பட்ட சேதமதிப்பு	ரூ. 1 1/2 லட்சம்.		

5. மீன் வளம்

மீன்பண்ணைகள்.—வீணுக்கப்படும் கோடிக்கணக்கான மீன் குஞ்சுகள் சேமிக்கப்பட்டு புகைவண்டி மூலம் வேலூர், திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்டன. இதன் மூலம் இவ்வாண்டில் ரூ. 945–5–9 வருமானம் கிடைத்தது.

மீன் பிடித்தல்.—ஆழ்கடல் மீன்பிடிப்பின் மூலம் அதிராம்பட்டிணம், துறையில் ரூ. 175–14–6 பொருமானமுள்ள 1,461 ராத்தல் மீன்தான் இவ்வாண்டு பிடிக்கப்பட்டன. அஜீத் என்னும் சலனப்படகின் உதவி கொண்டு ரூ. 634–1–0 மதிப்புள்ள 6,746 ராத்தல் மீன்கள் கரையோரத் திலேயே பிடிக்கப்பட்டன.

அதிராம்பட்டிணம், முத்துப்பேட்டை, ஆர்க்காட்டுத் துறை இம்மூன்று மீன் வாடிகள் மூலம் ரூபாய் 3,716–6–6 வருமானம் கிடைத்தது, 6 எண்ணை வடிக்கும் துறைகளில் 11,496 ராத்தல் ஈரல் சேமிக்கப்பட்டு 5,746 ராத்தல் மீன் எண்ணை வடிக்கப்பட்டது.

சங்கு குளித்தல்.—மல்லிப்பட்டணத்தில் சங்கு குளிப்பு இலாக்காவின் மேற்பார்வையில் நடந்தது. இவ்வாண்டு ரூபாய் 12,208-8-4 வருமானத்திற்கு சங்கு எடுக்கப்பட்டது.

பொது—இம்மாவட்டத்தில் 15 கடல் மீன்பிடிப்போர் சங்கமும், 52 நாட்டு மீன் பிடிப்போர் சங்கமும் உள்ளன. மீன் பிடிப்போர் குழந்தைகளுக்கென்று ஒரு பள்ளிக்கூடமும் காவிரிப்பூம் பட்டிணத்தில் நடத்தப் படுகிறது.

(5) ஸ்தல சுய ஆட்சி.

1. தஞ்சை ஜில்லா போர்டு ஆட்சி

இவ்வாண்டு பூராவும் ஜில்லாபோர்டு இயங்கி வந்தது, மேற்படி சபை இவ்வாண்டில் விசேஷமாக ஒரே ஒரு தடவையும், சாதாரணமாக எட்டு தடவையும் கூடிற்று. ஜில்லாபோர்டின் தினசரி அலுவல்கள்பற்றி கவனிக்க தனித்தனி குழுக்கள் பலவும் இயங்கிவந்தன. அவையாவன.—

(1) கல்விக்குழு, (2) பொதுநலக்குழு,(3) பொது வேலைகள், (4) போக்குவரத்து வசதிகள் குழு, (5) பொருளியல் குழு, (6) வரவு செலவு திட்டக் குழு.

போக்குவரத்து வழிதுறைகள்.—நெடுஞ்சாலையினர் நாட்டான்மை சாலைகளைப் போற்றி வந்தனர். புதுச்சாலைகள் அமைக்கும் வேலைகளை விரிவு படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் இவ்வாண்டிலும் தங்கள் பணிகளை ஆற்றிவந்தனர்.

2,101 மைல் 5 பர்லாங் நீளமுள்ள பலதிரப்பட்ட சாலைகள் சீர் செய்ய ரூ. 14,69,494 வரை செலவாகியது. இவ்வாண்டில் கட்டிமுடிந்தனவும், வேலையாகி வருகின்றனவுமான பாலங்கள், மதகுகளின் எண்ணிக்கை, 35 பாட்டைகளுக்கும் பாலங்களுக்கும் மொத்த செலவு ரூ. 9,45,937 ஆகும் கொள்ளிடத்தின் குறுக்கே கட்டும் பாலத்திற்காக இவ்வாண்டு ரூபாய் 1,18,800 செலவாகியது. மொத்தத்தில் அரசாங்கத்தினிடமிருந்து இத் துறையில் கிடைத்த மான்யம் ரூ. 3,21,472 ஆகும்.

45 ஒட்டத்துறைகளில் ஊராட்சிகளுக்கு கொடுத்தது போக இவ்வாண்டில் வரவு ரூ. 15,630.—இவ்வாண்டு தங்குமிடங்கள் 16-ம் அறச்சாலைகள் 21, தண்ணீர் பந்தல்கள் 5-ம், செவ்வனே நிர்வகிக்கப்பட்டன.

தொடக்க கல்வி.—ஜில்லாபோர்டு ஆட்சியின் கீழுள்ள 861 பள்ளிக்கூடங்களில் 64,456 மாணவர்களும் 28674 மாணவிகளும் கல்வி கற்றனர். கட்டாயக் கல்வித் திட்டம் 79 இடங்களில் அமுல் செய்யப்பட்டது. அடிப்படை கல்வி புதிதாக 18 பள்ளிகளிலும், முதியோர்கல்வி புதிதாக 11 பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்கப்பட்டது. இவைகளுக்கு ஆசிரியர் சம்பளமாகமட்டில் செலவானது. ரூ. 17,48,682-11-0 ஆகும்.

உயர் நிலைக்கல்வி.—புதிதாக துவக்கப்பட்ட வலங்கிமான பள்ளிக்கூடம் உள்பட 23 பள்ளிகள் ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்தன. இவைகளில் பட்டுக்கோட்டை பெண்கள் பள்ளியில் தையல் வேலையும் குடும்ப முறையும் கற்பிக்கப்பட்டன. மேலும் பிறபள்ளிகளில் நூல் நூற்றல், நெசவு தோட்டவேலை, வேளாண்மை, தச்ச வேலை முதலிய தொழில் கல்வி போதிக்கப்பட்டன.

சமுதாயக் கல்வி.—இவ்வேறுபாடுகளின் கீழ் மாணவர்கள் ஆடுதுறை, கல்லணை, டால்மியா சிமிண்டு தொழிற்சாலை முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தஞ்சை கைத்தொழில் கல்வி பள்ளி.—இப்பள்ளியில் 119 மாணவர்கள் பொது பொறியறிவு, தச்சுவேலை, பெட்டி செய்தல், ஓவிய வேலை, நெசவு வேலை, மோட்டார் தொழில்வேலை, காகிதம் செய்தல் முதலியவைகளை கற்ருர்கள். இம்மாணவர்களின் உழைப்பின் பலனுக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 77,740 உற்பத்தி சாமான்களின் விற்பனை மூலம் வந்த வரவு ரூபாய் 68,848 இவைகளுக்காக ஆன செலவு ரூ. 1,35,683.

கிராம சீரமைப்பு.—மருந்துகள், நூல் நிலையம், திரைப்படம் காட்டும் பொறிகள், ஒலி பெருக்கிகள், வாஞெலி பெட்டிகள், இவை அடங்கிய மாவட்ட கிராம சீர்திருத்த உந்து வண்டிகள் இரண்டு இவ்வாண்டு நாடு முழுவதும் சென்று பலதிரப்பட்ட பிரசாரங்களை செய்து வந்ததுடன் கிராம மக்களுக்குகான மருந்துகளேயும் வழங்கிவந்தன.

2. நகராட்சிகள்

இம்மாவட்டத்தில் உள்ள ஆறு நகராட்சிகளின் ஆட்சி நலம்பற்றிய குறிப்புகள் வருமாறு.—

தஞ்சாவூர்.

கல்வி.—இந் நகராட்சியின் கீழ் 16 ஆரம்பப் பள்ளிகளும் புதிதாக இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட 2 பள்ளிகள் உள்பட 8 முதியோர் கல்வி நிலையங்களும் பராமரிக்கப்பட்டன. இந் நகரில் உள்ள பொது நூல் நிலையத்தையும், 13 படிப்பகங்களேயும் பராமரிக்க ரூ. 4,444 செலவிடப்பட்டது.

மருத்துவம்.—நவீன மருந்துக்கள் கொண்ட நான்கு வெளி வைத்தியசாலைகளை நகராட்சி நிர்வகித்து வந்தது. தொத்து வியாதிஸ்தர்கள் தங்குவதற்காக 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ இல்லம் ஒன்றும் பராமரிக்கப்பட்டு வந்தது.

போக்குவரத்து.—பாட்டைகளும், தெருக்களும், ரூ. 91,771 செலவில் பராமரிக்கப்பட்டன. இரண்டு முக்கிய தெருக்களுக்கு தூசியில்லாத பாட்டைகள் போடப்பட்டன. ரூ. 65,000 மதிப்பில் ஆஸ்பத்திரி, ரஸ்தாவுக்கு சிமிண்டு காங்கிரீட்டு பாட்டை அமைக்க வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. இந் நகராட்சிக்கு மின்சார வினியோக மூலம் ரூ. 3,75,802–4–2 வரவு வந்தது.

கும்பகோணம் நகராட்சி.

கல்வி.—இந்நகராட்சி மன்றம் நகரில் உள்ள 22 ஆரம்பபள்ளிகளேயும் ஒரு உயர்நிலை பள்ளியையும் நிர்வகித்துவந்தது. இவையன்றி ஏழு உயர்நிலை பள்ளிகளும், ஒரு அரசினர் கல்லூரியும், இரண்டு மாபெரும் பொது நூல் நிலையங்களும் இருந்துவருகின்றன.

உடல் நலம்.—இந்நகராட்சியின் கீழ் மூன்று மருத்துவ சாலைகளும், ஒரு தாய் சேய் மருத்தகமும் உள்ளன. இவைகளைதவிர குட்டம் முதலியவற்றிற்கு தனித்தனி சர்க்கார் மருத்துவ இல்லங்களும் உள்ளன.

போக்கு வரத்து.—இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 8 மைல் நீளமுள்ள மண்பாட்டைகளுக்கும் வீதிகளுக்கும் கப்பி போடப்பட்டது. ரூ. 2,644 செலவில் 7 மதகுகள் கட்டப்பட்டன. சாலைகள் செப்பனிடுவதற்காகமட்டும் ரூ. 1,72,877 செலவிடப்பட்டது.

மாயூரம் நகராட்சி.

கல்வி.—இந்நகரில் நகராட்சியின் கீழ் 16 பள்ளிகளும் 2 உயர்நிலை பள்ளிகளும் இருக்கின்றன. இவைதவிர தனிக்குழுவினரால் நடத்தப்படும் ஆண்கள் உயர்நிலை பள்ளி ஒன்றும், அரசினரால் நடத்தப்படும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றும், உண்டு.

பொது நலம். அரசாங்க மருத்துவ சாலையில் இவ்வாண்டு 60, 796 நபர்களுக்கு சிகிச்சை செய்யப்பட்டது. சுகாதார நிர்வாகத்திற்காக சிப்பந்தி களுக்கான செலவுமட்டும் ரூ. 5,532 ஆகும்.

திருவாரூர் நகராட்சி.

கல்வி.—இந்நகராட்சி இவ்வாண்டில் 7 பள்ளிக்கூடங்களையும் ஒரு உயர் நிலைப் பள்ளியையும் நிர்வகித்து வந்தது.

உடல்நலம்.—இந்நகரில் உள்ள இரண்டு சித்த வைத்தியசாலைகளும் சரி வர நிர்வகிக்கப்பட்டு வந்தன.

போக்குவரத்து.—மண்சாலைகளை கப்பிசாலைகளாக மாற்றும் திட்டப்படி இவ்வாண்டு ஒரு மைலுக்கு மேல் ரூ. 12,051 செலவில் வேலை முடிக்கப்பட் பட்டது. ரூ. 11,370 செலவில் ஓடம் போக்கி ஆற்றின் மீது ஒரு பக்கபாலமும் ரூ. 9,750 செலவில் மடப்புரம் படித்துறையருகில் இதே ஆற்றின் மீது மற் றொரு பாலமும் கட்டப்பட்டது. மற்றும் சிலமுக்கிய வீதிகளுக்கு ரூ. 1,62,390 செலவில் தூசியில்லாத தளம் போடப்பட்டது.

நாகப்பட்டணம் நகராட்சி.

கல்வி.—இந்நகராட்சியின் கீழ் 18 பள்ளிக்கூடங்களும், 2 உயர்நிலைப் பள்ளிகளும். ஒரு பொது நூல்நிலயமும், நிர்வகிக்கப்பட்டுவந்தன.

போக்குவரத்து.—இவ்வாண்டில் 16 மைல் நீளத்திற்கு கப்பி போடப் பட்டது.

பொதுநலம்—இந்நகராட்சி ஒரு தொத்துவியாதி மருத்துவ இல்லத்தை யும், நாகூரில் ஒரு மருத்துவ இல்லத்தையும், நிர்வகித்து வருகிறது.

மன்னார்குடி.

இந்நகராட்சியும் மற்றவையே போன்று கல்வி, உடல்நலம், போக்கு வரத்து இவைகளை செவ்வனே கண்காணித்து வருகிறது.

3. ஊராட்சிகள்

அறிக்கை ஆண்டில் 24 பேரூராட்சி மன்றங்களும், 627 சிற்றூர் ஆட்சி மன்றங்களும் இயங்கி வந்தன. சிற்றூர் மன்றங்களை பஞ்சாயத்து அதிகாரி களும், பேரூர் மன்றங்களில் ஆடுதுறை நீங்கலாக மற்றவைகளை நிர்வாக அதிகாரிகளும், ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர்களும் மேற்பார்வை செய்து வந்தனர்.

முதல் வகுப்பு பஞ்சாயத்துக்களின் எல்லையில் 236-1/2 மைல் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வந்தன. பல மதகுகளும், பாலங்களும் கட்டப் பட்டன.

தொண்ணூறு ஊராட்சிகளில் மின்சார விளக்குகள் போடப்பட்டு வசதி செய்யப்பட்டது. பெரும்பாலன ஊராட்சிகளில் பள்ளிக்கூடங்கள், படிப்ப கங்கள் நூல்நிலயங்கள், வானொலி நிலயங்கள் இவைகள் நிர்வகிக்கப் பட்டு வந்தன. சில ஊராட்சிகளில் தண்ணீர் திட்டங்களும், மார்க்கெட்டு வசதிகளும், பேருந்துவண்டி நிலயங்களும் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப் பட்டன.

(6) பலவகை.

1. காந்தியடிகள் நினைவிற்கான காசநோய் நீக்கு நல நிவாரண நிவாரண நிலையம்.

நிதி மிகுந்தவர் தந்த பொற்குவி கொண்டும், அது குறைந்தவர் தந்த காசுகள் கொண்டும் பொதுமன்றங்கள் அளித்த பெரும்பணம் கொண்டும், அரசியல் அதிகாரிகள் அரும்பெரும் உழைப்பினைக்கொண்டும் தோற்றுவிக்கப்

பட்ட சிங்கிப்பட்டியில் உள்ள இம்மருத்துவ நிலையம் மாவட்ட தண்டல் நாய கம் அவர்களின் மேற் பார்வையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து காசநோய் பிடித்தவர்களுக்கு கனத்ததோர் உதவி நல்கிவந்தது. 9—12—51-லேயே துவக்கப்பட்ட இம்மருத்துவ நிலயத்தின் முன்னேற்றத்தைக்கண்டு யாவரும் பிரமித்ததுடன், அவரவர் அவரவர் சக்திக்கு ஏற்ப உதவி வந்தது குறிப்பிடத்தக்கது.

2. கரந்தை தமிழ்ச் சங்கம்

தமிழ் வேந்தர்வே. உமாமகேஷ்வரனுரால் துவக்கப்பட்ட இச் சங்கம் அறிக்கை ஆண்டிலும் தமிழ் மொழிக்கு பல நற்பணிகள் புரிந்து வந்தது. திருவாடுதுரை ஆதீனகர்த்தர் அவர்களின் உதவியினுல் இங்கு நடக்கும் பள்ளிகளைப்பற்றிய இவ்வாண்டு புள்ளிவிபரங்கள் வருமாறு :—

பள்ளியின் பெயர்.	மாணவர்.	ஆசிரியர்.	அரசாங்க உதவி.
தொடக்கப்பள்ளி ..	293	11	ரூ. 6,855
உயர்நிலைப் பள்ளி ..	325	14	ரூ. 7,425
புலவர்கல்லூரி ..	114	7	ரூ. 5,108

இப்பள்ளியில் நிர்வகிக்கப்படும் இலவச உணவு, உறைவிடம் தரும் அனுதைவிடுதிக்கு அரசாங்கம் ரூ. 4,353 மான்யம் கொடுத்துதவியது.

3. தஞ்சைக் கலைக்கூடம்

நெற்களஞ்சியமாம் தஞ்சையின் தலைநகரில் கலைக்களஞ்சியமாம் கலைக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டு நாடெங்கும் சிதறிக்கிடந்த சிற்பங்கள்பல சேகரிக்கப்பட்டும், பாரெங்கும் பரவிக்கிடந்த பலகலை சிருஷ்டிகளை வருவிக்கப் பட்டும், பார்ப்போர் கண்ணுக்கு விருந்தாக காட்சியளிக்கும்படி நிருவப் பட்டது.

4. சரஸ்வதி மகால் நூல் நிலையம்

பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே புகழுடன் விளங்கி வரும் இந் நூல் நிலயத்தில், அரசினரால் அளிக்கப்படும் உதவி நிதி ரூ. 23,200-ஐக் கொண்டு பழம்பெரும் நூல்களின் நகல்களை எடுக்கும் வேலை தொடர்ந்து நடந்தது. பல்வேறு அறிஞர்களாலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு அறிக்கை யாண்டில் 11 நூல்கள் வெளியிடப்பட்டன. இவ்வாண்டு இந்நிலயத்திற்கு வந்து போன பார்வையாளர்களின் எண்ணிக்கை மட்டும் 20,348 ஆகும்.

5. தொல்பொருள் கலைப்பிரிவு

இப்பிரிவினுல் புராதன ஞாபக சின்னங்களான தஞ்சை பெரியகோவிலிலும் அதைச் சுற்றியுள்ள சிவகெங்கை கோட்டையும், கோட்டையின் மற்றொரு பகுதியிலுள்ள சுவார்ட்ஸ் பள்ளியும் இவ்வாண்டு சீர்செய்யப்பட்டன.

இப்பிரிவில் செய்யப்பட்ட வேலைகளும் செலவுகளும் வருமாறு :—

1. தஞ்சைக்கோவிலின் சித்திரங்களை பழுதுபார்த்து பராமரித்தல்	ரூ. 2,300
2. தஞ்சை கோவில் வருடாந்திர மராமத்துக்காக	ரூ. 1,277
3. விசேஷ மராமத்துக்கள், அகழ் ஆராய்ச்சி	ரூ. 7,977
4, சிவகெங்கை கோட்டை வருடாந்திர மராமத்துகள்	ரூ. 2,130
5. சுவார்ட்ஸ் பள்ளி மராமத்துகள்	ரூ. 340

6. ஆதீன மடங்கள்

சைவம் தழைக்க தோன்றிய மடாலயங்கள், தருமபுரம், திருவாடுதுறை திருப்பனந்தாள், இவை மூன்றும் மக்களுக்கு தேவையான நற்சமய போதனைகளையும், கலைத்தொண்டுகளையும், கணக்கற்ற நற்றருமங்களையும் சாலச் செய்து வந்தன. சைவாகம நூல்களையும், தமிழ் கலைச் செல்வங்களையும், ஆராய்ந்து தொகுத்து இவ்வாதீனங்கள் வெளியிட்ட நூல்கள் பல. இத் துறையில் தருமபுரம் மடத்தினின்று மட்டும் 31 புத்தகங்கள் இவ்வாண்டு வெளிவந்துள்ளன.

7. தஞ்சை சாகுபடியாளர் பாதுகாப்பு அவசரச் சட்டம், 1952

பன்னெடுங்காலம் புதைந்து கொண்டே இருந்த பயிரிடுவோர் பங்குடையோர் பூசல் உச்ச நிலையடைந்து, புரட்சியினை தோற்றுவிக்க கூடியதாய் இருந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட இச்சட்டம் அமைதியை நிலைநிறுத்தி, இருசாருக்கும் ஏற்ற பங்குக்கு உறுதியளித்து, நாட்டின் நற்பெயரை காத்துநின்றது. இதன்பயனாக பாட்டாளிகள், உரிய பங்கு பெற்றனர், பயிரிட்டவர்கள் நல்ல வாரம் பெற்றனர். இருசாரரும் வெளியேற்றத்தினின்றும் பாதுகாப்பு பெற்றனர். நிலமுடையோர்களும் நேரமறிந்து நேர்மை மேற்கொண்டனர். பூசல் தீர்ந்தது. புதுயுகமும் பூத்தது.

இச் சட்டத்தின்படி 1952-53-ல் பதிவாகி தீர்ந்த வழக்குகள் வருமாறு—

விபரம்.	தாக்கலானவை.	தீர்ப்பானவை.
1. 6, 5 பிரிவுபடி மருபடி விசாரணைக்கு வந்த மனுக்கள்.	521	465
2. 13, 2 பிரிவுப்படி	140	110
3. 9, 3	4	4
4. 10, 2 (a)	309	237
5. 9, 3	4	4
6. 12, 4	98	96
7. 12, 5	3	3

8. புயல்

தென்னிந்திய சரித்திரத்தில் மறக்கமுடியாத ஒரு நாள் 30—11—52 ஆகும். அன்று தமிழகத்தின் கீழ்திசையில் கடல் குமுறி எழவெழுந்த புயலின் வேகம் பரந்த இம்மாவட்டத்தில் பாய்ந்துசென்று பல சதுரமைல்களை பாழ்படுத்தியது. கடலோர பாகமான நாகை, திருத்துரைப்பூண்டி தாலுக்காக்கள்தான் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டவையாகும். கடல் பொங்கி ஊரினுள் புகுந்தது. படகுகளும் பாய்மரங்களும் ஊரினுள் கடல் நீருடன் வந்தன. வீடுகளின் ஓடுகளும், மரங்களின் தழைகளும், சென்ற இடம் தெரியாமல் போயின. பலநூறு மக்கள் மறைந்தனர், பயிர்கள் அழிந்தன, பொருள் இழந்து, உற்றார் உறவினர் இழந்து மக்கள் பலர் தவித்தனர் மாவட்டமே கலங்கி நிலைகுலைந்து நின்றது ஓரிருதினங்கள்.

சேதங்கள்

1. உயிர்ச்சேதம்	349 (காணாமல் போனவர்கள் 15 உள்பட),
2. கால்நடைகள் மரணம்	26,053
3. தாக்கப்பட்ட வீடுகள்	35,230
4. சேதமடைந்த குடிசைகள்	162,412

		ரூ.
5.	நெல் விளைவு சேதம் மதிப்பு	70,95,000
6.	வாழைத்தோட்டம் சேதம்	41,33,000
7.	வெற்றிலைக்கொடி கால் சேதம்	1,68,00,100
8.	மரங்கள் முதலியன	எண்ணற்றவை.
9.	மொத்த சேத மதிப்பு	4,70,46,437

நிவாரணம்

		ரூ.
1.	சேதமடைந்த வீடுகள், குடிசைகளுக்கு	14,23,941
2.	உயிரிழந்தவர் குடும்பங்களுக்கு மான்யம்.. ..	3,475
3.	ஆதார பாட சாலைகளுக்கு உதவி	41,905
4.	பொது சத்திர ஸ்தாபனங்கள்	11,760
5.	பருவதராஜ குலத்தார்கள்	14,625
6.	தாய், சேய் மருந்தகங்கள்	900
7.	தரங்கம்பாடி உப்புக்குளங்களை இறைக்க	560
8.	வேதாரண்யம் கன்னியா குருகுலம்	15,000
9.	காசநோய் நீக்குநிலயம், சிங்கிப்பட்டி	8,000
10.	தஞ்சை ஜில்லா சத்திரம்	12,000
11.	தஞ்சை ஜில்லா துவக்கப்பள்ளிகள்	70,735
12.	புளிய விதைகள்	100
13.	விநியோகிக்க வாங்கிய துணிகள்	80,100
14.	திருத்துரைப்பூண்டி, புஷ்பவனம் படகுக் காரர்கள் ..	1,175
15.	பருவதராஜகுலத்தாருக்கு நூல் விநியோகம் ..	19,690
16.	துணிவாங்கி விநியோகிக்க திருநெல்வேலி மாவட்ட அதிகாரிக்கு அனுப்பியது	1,810
17.	மாயூரம் சீயாழி தாலுக்காக்கள் கடலோர கிராம ரயத்துகளுக்கு எரு வாங்கியது	1,653

இவைகளையன்றி 11 கஞ்சித்தொட்டிகள் வைத்து 85,120 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. ரூ. 10-க்கு குறைவாய் கிஸ்தி செலுத்தும் கடலோர விவசாயிகளுக்கு 1,08,000 மதிப்புள்ள உணவு தான்ய, காய்கறி விதைகள் வழங்கப்பட்டன. வீடுகள் பழுதடைந்த அல்லது பாழ்பட்ட சர்க்கார் சிப்பந்திகளில் ரூ. 100-க்கு குறைந்த மாத ஊதியம் பெறுபவர்களுக்கு 3 மாத சம்பளம் கடனாக வழங்கப்பட்டது.

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras.
CITY BOOK COMPANY, Madras-4.
HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
P. VARADACHARI & Co., Madras-2.
THE SOUTH INDIA SAIVA SIDDHANTHA WORKS PUBLISHING SOCIETY, Madras-1.
VENKATRAMA & Co., Madras-1.
V. PERUMAL CHETTY & SONS, Madras-1.
M. DORAISWAMY MUDALIAR & Co., Madras-1.
C. SUBBAIAH CHETTY & SONS, Madras-5.
SOUTH INDIA TRADERS, Madras-14.
FREE INDIA CO-OPERATORS' AGENCY, Madras-14.
THE SECRETARY, THE CENTRAL POLYTECHNIC CO-OPERATIVE STORES, LIMITED, Madras.

IN MUFASSAL.

THE EDUCATIONAL SUPPLIES COMPANY, (R.S. Puram) Coimbatore.
D. SREEKRISHNAMURTHY, Ongole, Guntur district.
M. SESHACHALAM & Co., Masulipatnam, Krishna district.
HINDUSTAN DIARY PUBLISHERS, Vijayavada, Krishna district.
THE COMMERCIAL LINKS, Governorpet, Vijayavada, Krishna district.
E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
K. P. AHMED KUNHI & BROS., Cannanore, Malabar district.
P. K. BROTHERS, Kozhikode, South Malabar district.
A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
TIMES MODERN MART, Salem, Salem district.
K. BHOJA RAO & Co., Mangalore, South Kanara district.
U. R. SHENOY & SONS, Mangalore, South Kanara district.
P. N. SWAMINATHA SIVAM, Pudukkottai, Tiruchirappalli district.
S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli.
PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
S. R. SUBRAMANIAM, Tirunelveli, Tirunelveli district.
ARIVUNOOLAGAM, Ootacamund Nilgiris.
TRIVENI PUBLISHERS, Masulipatnam.

IN OTHER STATES.

JAIN BOOK AGENCY, New Delhi-1.
INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
BHARAT STORES, Ernakulam.

AGENTS SPECIALLY APPOINTED FOR THE SALE OF SRI BHARATHIAR'S PUBLICATIONS.

ANANDAVIKATAN, Madras-2.
THE SWADESAMITRAN, Madras-2.
SRIMAGAL & Co., Madras-1.
M. PALANI & Co., Pudukkottai.
THE KALAIMAGAL & Co., Colombo-11.
MOHAN & Co., LIMITED, Colombo.